**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

O.S. 13/2009 தேதி 16-12-2024 Starting Time 12:16

வா.சா.1 —— ராமாரெட்டி

வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-

1. சர்வே எண்கள் 668/3, 667/1, 669/2 நல்லூர் கிராம சொத்துக்கள் 7ம் பிரதிவாதிகளுக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அல்ல இது எனது தகப்பனார் பெயரில் வாங்கி யசொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்கள் வாங்கும்போது 1ம் பிரதிவாதியின் மனைவி பணம் கொடுத்து வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 7ம் பிரதிவாதி மோசடி ஆவணம் தயாரித்தார் என்று கூறி 1ம் பிரதிவாதி அவர் மீது ஒரு குற்ற வழக்கு தொடர்ந்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி குற்ற வழக்கு சி. சி. எண். 96/2012 என்று ஓசூர் நீதித்துறை நடுவர் 2 நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை சொத்தாக இருக்கும் பட்சத்தில் நான் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், 1ம் பிரதிவாதியின் சொத்து என்பதால் தான் அவர் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு சொத்தை காப்பாற்றி வருகிறார் என்றால் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 7ம் பிரதிவாதியின் சொத்துக்களாக இருந்தால் அவர்கள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 176/2010 இதே நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் மேற்கண்ட சொத்துக்களை சேர்த்திருப்பார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை என்கிறார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் சர்வே எண். 668 1ம் பிரதிவாதி முனிரெட்டியின் மகளான Thrishu M. Reddy பெயரில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. கோட்டூர், பல்லப்பள்ளி, தேவர் உளிமங்களம், கக்கதாசம் ஆகிய கிராமங்களில் உள்ள சொத்துக்களை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சில சொத்துக்களை நான் அனுபவம் செய்து வருகிறேன், சில சொத்துக்கள் தரிசு நிலங்களாக உள்ளது. சுமார் 40 வருடங்களாக மேற்சொன்ன 4 கிராமங்களில் உள்ள சொத்துக்களை நான் தான் சாகுபடி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல, சில சொத்துக்களை என்னால் முடிந்தவரை செய்து வருகிறேன் சில சொத்துக்கள் அப்படியே உள்ளது. எனது தந்தை காலத்திலிருந்து வாழை, கரும்பு சாகுபடி செய்து வருகிறேன். சிலவற்றில் நீலகிரி மரம் வைத்து சாகுபடி செய்து வருகிறேன்.

3. அந்த நீலகிரி தோப்பில் நானே அறுவடை செய்து வருகிறேன், சில சமயங்களில் நெருப்பு வைப்பதால் சேதாரம் ஆகி வருகிறது. எனது தந்தை சின்னமுனிசாமிரெட்டியின் மீது என் குடும்பத்தார் மற்றும் எனது அண்ணனான 1ம் பிரதிவாதி மிகுந்த கவுரவ மரியாதை இருந்தது வந்தது என்றால் சரிதான். அவர் உயிருடன் இருக்கும் வரை அவர் தான் குடும்பத்தை நடத்தி வந்தார் என்று சொன்னால் சரிதான். அவர் உயிருடன் இருக்கும் வரை 1ம் பிரதிவாதி அவரது

மனைவி மற்றும் அவர்கள் பிள்ளைகள் அவரை கவுரவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். தந்தை மீது உள்ள மரியாதை மற்றும் கவுரவத்தை வைத்து 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் சேர்ந்து மரியாதை நிமித்தமாக அவர் மீது உள்ள கவுரவத்தினால் வழக்கு பி அட்டவணை சொத்துக்களை அவர் பெயரில் தங்களுடைய வருமானத்தை போட்டு வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணி சுனோனந்தம்மா எந்த ஊர் என்றால் அவர் ஆருப்பள்ளியை சேர்ந்தவர். எனது அண்ணி வசதியான குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல, சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர். எனது அண்ணியின் குடும்பத்தில் எனது அண்ணிக்கு பாகத்தில் சொத்துக்கள் கொடுத்தார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. எனது அண்ணிக்கு பாகத்தில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது எனக்கு தெரியும் என்றும், அதிலிருந்து அவருக்கு நிறைய வருமானம் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எனது அண்ணியின் பாக சொத்துக்களில் வந்த வருமானத்தை கொண்டு தான் தாவா பி அட்டவணை சொத்துக்களை எனது தகப்பனாரின் பெயரில் கிரயம் வாங்கப்பட்ட்து என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணிக்கு அந்த காலத்திலேயே பெங்களூரில் வீட்டு மனை கொடுக்கப்பட்டது அதனையும் விற்று தான் பி அட்டவணை சொத்து எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

4. சர்வே எண். 669/3 ன் விஸ்திரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 669/3 ன் யாரிடம் வாங்கப்பட்டது என்று சொன்னால் திம்மாரெட்டி எனது அக்காவின் கணவர், குர்ரம்மா, நரசிம்மரெட்டி ஆகியோரிடமிருந்து வாங்கப்பட்டது. அந்த விவரம் எனது தகப்பனார் சொல்லி தெரிகிறது. சர்வே எண். 670/2, சர்வே எண். 641/1, 641/2, 642/3,663/4, 667/3, 668/4 669/1, 667/1, 668/3 மற்றும் 669/2 ஆகிய சொத்துக்கள் எப்போது யாரிடமிருந்து வாங்கப்பட்டது, எப்போது வாங்கப்பட்டது அதன் விஸ்தீரணம் போன்ற விவரம் தெரியுமா என்று கேட்டால் எனக்கு தேதி தெரியாது என்கிறார். பி அட்டவணை சொத்துக்கள் எல்லாம் 1ம் பிரதிவாதி கோழி பண்ணை நடத்துவதற்கு அனுமதி பெற்று அதில் வாடகை பெற்று வருகிறார் என்றால் சரிதான். அந்த கோழி பண்ணை யார் நடத்தி வருகிறார்கள் என்று சொன்னால் எனது தந்தையும் அவர் இறந்த பிறகு எனது அண்ணன் 1ம் பிரதிவாதி நடத்தி வருகிறார். பெங்களூரில் ஹொங்கசந்திரா கிராமத்தில் உள்ள சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதன் விஸ்தீரணம் 75 சென்ட் இருக்கும். அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் பத்திரம் இல்லாததால் நான் சேர்க்கவில்லை. அந்த சொத்தில் நான் பாகம் கோரவில்லை என்று நான் ஒரு குறிப்பாணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. அப்படியென்றால் எனது தந்தை பெற்ற சொத்துக்களில் நான் பாகம் கேட்டிருப்பேன் என்றும், மேற்படி பெங்களூர் சொத்து சேர்க்காததால் என்னுடைய வழக்கு பகுதி பாக தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ அட்டவணை சொத்துக்கள் கக்கதாசம், பல்லப்பள்ளி, கோட்டூர் ஆகிய கிராமங்களில் உள்ள சொத்துக்களில் சிலவற்றை எனது தகப்பனார் கிரயம் வாங்கியுள்ளார். சில சொத்துக்கள் எனது தாயார் வாங்கியுள்ளராரா என்றால்

நான் சிறுவனாக இருக்கும்போது வாங்கியிருக்கலாம் என்கிறார். பி அட்டவணை சொத்துக்கள் உள்ள நல்லூரில் கிராமத்தில் உள்ள ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். அதே விதத்தில் அ அட்டவணை சொத்துக்களுக்குரிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சில சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன் சில சொத்துக்களுக்கு தாக்கல செய்யவில்லை. கக்கதாசத்தில் உள்ள சொத்துக்களுக்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் இருப்பதை கொடுத்துள்ளேன் இல்லாதது இல்லை. எனக்கு யார் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் எனது மாமா செய்து வைத்தார். நான் எனது திருமணத்திற்கு முன்பு தற்கொலை முயற்சி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அச்சமயத்தில் 1ம் பிரதிவாதியும் எனது அண்ணியும் தான் காப்பாற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல எனது தந்தை தான் காப்பாற்றினார். எனது அண்ணன் 1ம் பிரதிவாதி அந்த சமயத்தில் என்னை மிகவும் திட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என்னை திட்டிய காரணத்தினால் அவரின் முகத்தையே நான் பார்க்க மாட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் எனது தந்தை இறந்தபிறகு பாகப்பத்திரத்தில் கையெழுத்திட என்னை அழைத்தார் என்றும் ஆனால் நான் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல, எனது தம்பி 2ம் பிரதிவாதி என்னை அழைத்து அப்பா வாங்கிய சொத்துக்களை பட்டா மாறுதல் செய்யவேண்டுமென்று என்னிடம் கையெழுத்து பெற்றார். நான் பாகப்பத்திரத்திற்கு எல்லாம் வரமாட்டேன் அவரின் முகத்தையே நான் பார்க்க மாட்டேன் என்று சொல்லி ஒசூரில் வந்து சையத் அன்வர் பாஷா என்ற ஒரு நோட்டரி பப்ளிக் முன்பு ஒரு பொது அதிகார ஆவணத்தை 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்து அதன் பேரில் பாகப்பத்திரம் செய்துக்கொள்ள என்று எழுதி கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

6. அந்த பொது அதிகாரம் பத்திரம் 21.02.2005ல் தான் எழுதி கொடுத்தேன் என்றால் பொது அதிகார ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றும், பட்டாவிற்காக தான் நான் கையொப்பம் செய்தேன் என்று சாட்சி சொல்கிறார். நான் வழக்கறிஞர் முன்னிலையில் பொது அதிகார ஆவணத்தை எழுதி கொடுத்து செய்தேன் என்றும், வழக்கிற்காக பட்டாவிற்காக தான் கையொப்பம் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த பொது அதிகாரத்தின் அசல் ஆவணம் 2ம் பிரதிவாதியிடம் தான் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பொது அதிகாரத்தின் அடிப்படையில் தான் எனக்கும் 1ம் பிரதிவாதியாகிய எனது அண்ணனுக்கும் 2ம் பிரதிவாதியான எனது தம்பிக்கு பாகப்பத்திரம் ஆகும் என்று சொன்னால் சரியல்ல, நான் இல்லாமல் பாகப்பத்திரம் எப்படி போட முடியும் என்கிறார். அந்த பாகப்பத்திரத்தின் படி தான் அவர்கள் தான் இதுவரை அனுபவித்து வருகிறார்கள் என்றும், எனக்கும் அந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது சகோதரிகளான 3 முதல் 5 பிரதிவாதிகள் மேற்சொன்ன பாகப்பத்திரத்தை ஒப்புக்கொண்டு தங்களுக்கு தங்கள் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே பாகம் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், வழக்கு சொத்துக்களில் எந்த வித பாகமும் வேண்டாம் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது, எனது தந்தையின் பாகம் எனக்கு வேண்டும்.

7. எனது தந்தை உயிருடன் இருக்கும்போதே ஒரு உயில் பத்திரம் இந்த சொத்துக்கள் எல்லாம் 1ம் பிரதிவாதிக்கே சேர்ந்தது என்று சொன்னால் சரியல்ல. அந்த உயில் பத்திரத்தை வைத்து எனது அண்ணன் 1ம் பிரதிவாதி வங்கியில் லோன் பெற்று அந்த உயில் பத்திரம் தற்போதும் வங்கியில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் அனைவரையும் சமமமாக தான் நடத்துவார் என்கிறார். அ அட்டவணை சொத்துக்களிருந்து எந்த வருமானமும் எனது தகப்பனாருக்கு வரவில்லை என்பதால் பி அட்டவணை சொத்துக்கள் எனது தகப்பனார் வாங்கிருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி அட்டவணை சொத்துக்கள் 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் தான் வாங்கி எனது தந்தை பெயரில் பெயரளவிற்கு கிரயம் வாங்கியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ளவாறு எனக்கு பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கது அல்ல என்றும், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

7ம் பிரதிவாதி தரப்பில் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time 13:04

Taken down by me in Open Court Tr.K. Ananda Kumar examined the witness in Telugu, and Tmt. Sridevi and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur